# ★ கத்தோலிக்கக் குழு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும்?


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 12 இதழ் 343
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-1-1994


(யாழ்ப்பாணம்)
கத்தோலிக்க திருச்சபை கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலான நால்வர் அடங்கியகுழு இன்று யாழ்.நகர் வருகின்றது. இந்தக்குழு இங்கு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரியவருகிறது. வடக்கு கிழக்கில் இடம் (4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தேர்தல்:

# வேட்பாளர் யாரென்பதே மக்களுக்குத் தெரியாது

— பி. பி. ஸி.

(கொழும்பு)
"கிழக்கு மாகாணத்தில் சகஜ வாழ்வு திரும்பிவிட்டது, என்பதை வெளிஉலகுக்குக் காட்டுவதற்காக, அரசு மட்டு நகரில் உள்ளூராட்சி தேர்தல் களை நடாத்துவதற்கு ஏற்பாடு களை செய்துவருகின்றபோதிலும், பொதுமக்கள் இத்தேர் (4-ம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையல்ல

# அரசு யுத்த நிறுத்தம் செய்து

# புலிகளுடன் பேச வேண்டும்!

## சிறிலங்கா கலை, கலாசார அமைப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. எனவே சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும் என சிறிலங்கா கலை, கலாசார மன்றத்தின் பிரதான அமைப்பாளர் சுனில் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினை மிக முக்கிய பிரச்சினை மற்றும் பொருளா என்பது தாரம் சம்பந்தமான மாநாடு களை நடாத்துவதில் இவர் மேலும் தெரிவிக்கையில்: தமி ழ் மக்களை பிரதிபலிப்பவர் குறிப்பிடத்தக்கது. திரு சுனில் சிறிவர்த்தன புலிகளுக்கு பூரண அதிகாரம் வழங்கவேண்டும். மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் இருப்பதாக அரசு கூறிவருகிறது. ஆனால் தென் மாகாண (4-ம் பக்கம் பார்க்க)

## சூரியகந்த விவகாரம்:

# விசாரணை பெப்ரவரி 1-ம் திகதி வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)
சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் சம்பந்தமான விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ம் திகதிவரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அரசியல் பொலிஸார் நீதிமன்றத்தில் விடுத்த வேண்டுகோள் ஒன்றை அடுத்தே இந்த விசாரணை மேற்படி தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-ம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ். வரும்

# செஞ்சிலுவைப் பிரதிநிதி புலிகளுடனும் பேசுவார்

(யாழ்ப்பாணம்)
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய விவகாரம் களுக்குப் பொறுப்பான பிரதிநிதியை அதிகாரி பியேர் கொலரேஸ் இன்று காலை யாழ்ப்பாணம் வரவுள்ளார். நேற்று முன்தினம் காலை கொழும்பு வந்தடைந்த இவர் நேற்று விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்தார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடு குறித்தும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டபாதுகாப்பு வலயம் குறித்தும் இராணுவத்தினரால் அண் (4ம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபைத் தேர்தல்:

# வேட்பு மனுக்கள் நேற்று தாக்கலாகின

(கொழும்பு)
தென்மாகாண சபைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நேற்று சம்பந்தப்பட்ட கச்சேரிகளில் தாக்கல் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

ஐ. தே. கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும். காலி, மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் நியமனப் பத்திரங்களை நேற்றுத் (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடா ஷெல் தாக்கு:

# அரச அதிபர் ஜெனரல் ஹமில்டனுக்கு விளக்கம்

(கொழும்பு)
யாழ்.குடாநாட்டின் மீது இராணுவத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் "ஷெல்" தாக்குதல் பற்றி யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணிகோவிடம் விளக்க எடுத்துக் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் தற்போது தங்கியிருக்கும், யாழ். அரச அதிபர் கடந்த வாரம் பாதுகாப்பு செயலாளரை அவரின் (4ம் பக்கம் பார்க்க)

## தமிழக ஆளுநரை கொலை செய்ய

# ஜெயலலிதா அமைச்சரவை உறுப்பினரை நியமிப்பு

வாழப்பாடி கூறுகிறார்

(சென்னை)
எதிர்வரும் 26ம் திகதி இந்தியக் குடியரசுத் தினத்தன்று தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியை கொலை செய்வதற்கு அ. இ. அ. தி. மு. க வினர் திட்டமிட்டுள்ளதாகவும், தற்போது முதல்வர் ஜெயலலிதா தனது அமைச்சரவையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை நியமித்துள்ளதாகத் தமக்கு நம்பிக்கையான தகவல் கிடைத்திருப்பதாக தமிழக இந்திரா காங்கிரஸ் (4-ம் பக்கம் பார்க்க)

# உணவுபொருள்களை அனுப்ப ஆளுநர் லயனல் நடவடிக்கை

(கொழும்பு)
வடக்கு—கிழக்குப் பகுதிகளுக்குப் போதிய உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாக, வடக்கு—கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். ஆளுநர் பத்திரிகையாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில், வடக்கு—கிழக்குப் பகுதிகளுக்குத் தேவையான உண (4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய குடியரசு தினத்தில்

# ஜெயலலிதா, சென்னாரெட்டி வெவ்வேறு மேடைகளில்

(சென்னை)
இந்தியக் குடியரசுத் தின நிகழ்ச்சிகள் இம்முறை தமிழ் நாட்டில் நடைபெறும்போது ஆளுநர் சென்னாரெட்டியும், முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் வெவ்வேறு மேடைகளிலிருந்து நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. குடியரசுத்தின நிகழ்ச்சிகள் (4-ம் பக்கம் பார்க்க)

மனிதனுக்கு
இல்ல வார்த்தை
வயிறை மூடும்.

இங்கிலாந்து பழமொழி.

# நாடு முழுவதிலும் உடனடியாக
# 1000 வைத்தியர்கள் தேவை
## வெளிநாட்டவரும் அழைக்கப்படுவர்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு சுமார் ஆயிரம் வைத்திய நிபுணர்கள் தேவைப்படுவதாகவும் தற்போது பல்கலைக்கழகங்களில் பணியாற்றுவோர் உட்பட 408 வைத்திய நிபுணர்களே சேவையிலிருப்பதாக சுகாதார, மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பற்றாக்குறையைப் போக்குவதற்காக சிரேஷ்ட வைத்திய பதிவாளர்கள், வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் ஆகியோரின் தேவைகளைப் பெற்றுக்கொள்ள மேற்படி அமைச்சு முடிவு செய்துள்ளது.

உள்நாட்டில் விசேட பயிற்சி பெற்ற 30 வைத்தியர்களும் 40 வைத்திய ஆலோசகர்களும் தற்சமயம் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

இலங்கை வைத்தியர்கள் மன்றம் கடந்த ஆண்டில் 34 வைத்தியர்களை ஆலோசகர்களாக அங்கீகரித்துமுள்ளது. (ஸ)

# நமது நோக்கு

## புதியன போற்றுவோம்!

யாழ். மாவட்டத்தில், மாதாந்தம் ஐந்து கோடி ரூபா செலவில் அரசாங்கம் உணவளிக்க வேண்டியிருக்கிறது.

அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களுக்கு உணவளிக்க இவ்வளவு செலவு செய்கிறோம் என அரசு பெருமையாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவா தமிழர் பிரச்சனை? அகதிகளுக்கு உணவளித்தல் மாத்திரமா தீர்வு?

ஆனால் உண்மைநிலை என்ன? பலவித தடைகளால் விவசாயிகள் பூரணமாகச் செயற்படமுடியவில்லை; உரிய உள்ளீடுகள் உரியகாலத்தில் கிடைப்பதில்லை.

இதேவேளை, புதிய கண்ணோட்டத்தில் விவசாய உற்பத்திக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இவை வரவேற்கப்பட வேண்டியவை.

உதாரணமாக, உவர் நிலப்பரீட்சார்த்த நெல் உற்பத்தி வெற்றியளித்துள்ளதாக கோப்பாய் விவசாயச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எதிர்பார்த்த விளைச்சல் கிடைத்திருப்பதாகவும், அறுவடைவைபவரீதியாக நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த போகத்திலே உவர்நிலப் பகுதி எங்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டியது அவசியமல்லவா?

இதேபோல, வரகிலிருந்து பாண் தயாரிக்கும் முயற்சி பொருண்மிய நிறுவனத்தின் இணைவு பகுதியினால் மேற்கொள்ளப்பட்டது. உரும்பராயிலிருந்து வரகிலிருந்து உற்பத்திசெய்த பாண் விற்பனைக்கு வந்துள்ளது.

இதேவேளை, கம்புப் பயிர்ச்செய்கையும் வரண்ட பிரதேசத்தில் மேற்கொள்வதற்கு மக்கள் முன்வரவேண்டும்.

அரிசி கோதுமை போன்ற தானியங்களிலுள்ள அதே போசாக்குச் சத்து; கம்புத் தானியத்திலும் உண்டு.

சோறு, கஞ்சி, சிற்றுண்டிகள் தயாரிக்கவும் இத்தானியம் உதவும். இதுவும் இங்கு பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்பட்டபோது, ஏக்கருக்கு ஆயிரம் கிலோ விளைவு பெறப்பட்டிருக்கிறது.

தரிசு நிலங்களில் இதன் உற்பத்தி மேற்கொள்ள முடியும்.

எனவே எமது பிரதேச விவசாயிகள் பழமையிலேயே மூழ்கிக்கிடக்காது புதியன போற்றி மக்களுக்கு உண்டிகொடுத்து உயிர் கொடுக்கும் பெருமை பெற வேண்டும்!

# '95' முதல் பல்கலைக்கழக அனுமதியில்
# புதிய நடைமுறைக்கு சிபார்சு

(கொழும்பு)

1995ம் ஆண்டில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் புதிய நடைமுறை ஒன்றை வகுக்குமாறு பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பது சம்பந்தமாக விசாரணை செய்யும் ஆணைக்குழு அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது.

பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் கிங்ஸ்லி சில்வா தலைமையில் கல்விச்சேவை ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் எஸ். பண்டிதரத்ன, ஆனந்தா கல்லூரி அதிபர் ஏ. ஜி. குணரத்ன, கல்விப் பணிப்பாளர் திருமதி திலோசுந்தரி கலிங்கவம்சம் ஆகியோர் அடங்கிய ஆணைக்குழுவே இத்தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணைக்குழுவுக்கு கல்விமான்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன அமைப்புக்கள் அனுப்பிய 400 அறிக்கைகளைப் பரிசீலித்தே இந்த ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாம்.

93ம் ஆண்டு கல்விப்பொதுத் தராதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களே 1995 ஆண்டில் புதிய நடைமுறையின்படி பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. —ம-ி

# மலேரியா தடை மருந்துகளை
# யாழ்ப்பாணம் அனுப்ப மறுப்பு

(உடுவில்)

1935ம் ஆண்டு தொடக்கம் மலேரியா தடை இயக்கம் இலங்கை பூராவிலும் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் சகல பகுதிகளிலும் இத் தடை இயக்கம் செயற்பட்டு வருகின்ற போதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் தற்போது அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை காரணம் காட்டி மலேரியா தடைமருந்தான டி.டி.ரி. மலத்தியோன் போன்றவற்றை யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் தமிழ்த் தையல் வைத்தியசாலை மாணவர்கள் மத்தியில் மலேரியா பற்றியும் அதன் தடுப்பு முறைகள் பற்றியும் எடுத்து விளக்கிய சுன்னாகம் பகுதி சுகாதார பரிசோதகர் திரு. கே. இ. பாலராஜா இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

மலேரியா தடை இயக்கம் செயற்பட்ட போதிலும் இதனை முற்றாக ஒழிக்க முடியவில்லை. நுளம்புகளை முற்றாக அழிக்கும் திட்டத்தில் முற்றாக வெற்றி காண முடியாதிருப்பதும், மலேரியா நோயாளிகளை இனம் காண முடியாதிருப்பதுமே இதற்கு காரணம்.

மத்திய மலைநாடு, தென் பகுதி போன்ற இடங்களை தவிர ஏனைய வரண்ட பிரதேசங்களில் இந்நோய் அதிகம் காணப்படுகின்றது. 2900 அடி வரையிலேயே நுளம்பு பறக்கும் சக்தியை கொண்டிருப்பதால் மலைநாட்டில் இந்நோய் இல்லை. மலேரியாவில் 98 வீத மானவை சாதாரணமானவை. 2 வீத மானவை மூளை மலேரியா இது பயங்கரமான வியாதி இரத்த பரிசோதனைகள் மூலமே இதனை கண்டறியலாம்.

ஒரு முறை மலேரியா வந்தால் தொடர்ந்தும் வரலாம். மலேரியாவை நாம் இங்கு இருந்து எவ்வாறு ஒழிக்க முடியாமல் உள்ளதோ அதேபோல் கிருமிகளை உடம்பில் இருந்து முற்றாக ஒழிக்க முடியாமலும் உள்ளது.

முற்றாக மலேரியாவை நீக்க முடியாவிடினும் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் எனவே சமூகம் பிரச்சனையாக திகழும் மலேரியாவை ஒழிப்பதில் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். (109.ஜ)

## வரகுப் பாண்
## உற்பத்தி அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினரின் முயற்சியினால் வரகுப் பாண் உற்பத்தி தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீரிழிவு நோயாளரின் நன்மை கருதி அறிமுகப்படுத்தப்பட்ட இவ் உற்பத்தி உரும்பராய் மருதம் பேக்கரியினால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இப்பாண் உற்பத்தி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது -ி

## வறிய மாணவர்க்கு
## வறுமை நிவாரண முத்திரையுடன்
# மேலதிக உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழ் நிவாரணம் பெற்றுவந்த குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைக்குப் பதிலாக 5 வயதிலிருந்து 18 வயது வரையிலான மாணவர்களுக்கு அவர்களின் வறுமை நிவாரண முத்திரையுடன் மேலதிகமாக ஒரு உணவுமுத்திரை வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்துவந்த பாடசாலை மாணவர்களுக்கான மதியஉணவு முத்திரை கடந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.

வறுமை நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் 5 வயது தொடக்கம் 18 வயது வரையிலான பிள்ளைகளுக்கான மாணவர் மதிய உணவுமுத்திரை பெறுவதற்கு விசேட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்தல்வேண்டும். இந்த நிவாரணம் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இதற்கான படிவங்களை இன்னும் சில தினங்களில் எடுத்துக்கொண்டு வருவாரென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162 ஜ)

## தைப்பூசம்

(அச்சுவேலி)

இந்துக்களின் முக்கியமான தைப்பூச விழா 27ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்துமக்கள் அன்றைய தினத்தில் மங்கள காரியங்கள் ஏடு திறத்தல் சுபகாரியங்கள் ஆகியவற்றை செய்வர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் ஆலயத்தில் அன்று காலை விசேட அபிஷேகமும் நண்பகல் 12-30 மணியளவில் முருகப்பெருமான் இடப வாகனத்தில் வீதி உலா வருதலும் நடைபெறவுள்ளது. (59)

## விடுகதை போட்டி

(யாழ்ப்பாணம்)

விநாயகர் தர்ம நிதியமும் சைவ கலை இலக்கிய பேரவையும் இணைந்து விஞ்ஞான விடுகதை போட்டி ஒன்றை வடமராட்சி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தவுள்ளார்கள்.

ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்தும் கல்விப் பொதுத் தராதர சாதாரண, உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம். விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 12-ந் திகதியாகும். —ம-ி

## இராசிபலன்

25 - 1 - 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு தை 12)

திரயோதசி மு இ. 8-46 வரை; திருவாதிரை பி. இ. 1-07 வரை இராகுகாலம் மாலை 3-36 முதல் 5-06 வரை சுபநேரம் நண்பகல் 11-06 முதல் 12-36 வரை பிரதோச விரதம்.

மேடம்: மன்னிப்பு, சாதனை, மனநிறைவு, பிறர் சகாயம்

இடபம்: கண்டிப்பு, தாய் வழி விரோதம், அலைச்சல்.

மிதுனம்: அவதானம், பண வரவு, பயண அனுகூலம்.

கடகம்: விரோதம், போட்டி, தலைகுனிதல், கடன்பளு.

சிங்கம்: கலந்துரையாடல், தொழில் உயர்வு, மித்திர உதவி.

கன்னி: விருந்தினர் வருகை மனமகிழ்ச்சி, பொதுப்பணி.

துலாம்: ஆணவப் போக்கு, மனசஞ்சலம், முரண்பாடு.

விருச்சிகம்: பிறர் சூழ்ச்சி, கடும் யோசனை, அவசரப் போக்கு.

தனுசு: அதிர்வாய்ப்பு, காரியசித்தி, பெரியோர் ஆசி.

மகரம்: எதிர்பாராத நன்மை, தெய்வீகப்பணி புகழ்

கும்பம்: குடும்பகவலை, இனசனவிரோதம், வெறுப்பு.

மீனம்: வாக்குவாதம், பெண் தொல்லை, மனக்குறை.

— ஜோஸ்யர்

## கிரையோஜெனிக் என்ஜின்களை
# இந்தியாவிற்கு வழங்க
# ரஷ்யா இணக்கம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கு 7 கிரயோஜெனிக் ரொக்கட் என்ஜின்களை வழங்க ரஷ்யா சம்மதித்துள்ளது.

அமெரிக்காவின் நெருக்குதலின்பேரில் இந்தியாவுக்கு இத்தகைய ரொக்கட் என்ஜின்களை வழங்க ரஷ்யா முன்னர் மறுத்தது. ஆனால் இப்போது 25 கோடி டொலர் மதிப்புள்ள இந்த என்ஜின்களை வழங்க ரஷ்யா இணங்கியுள்ளது.

சர்வதேச ஏவுகணை கட்டுப்பாட்டு விதிகளை மீறும் செயல் என ரஷ்ய—இந்திய ஒப்பந்தத்தை அமெரிக்கா கண்டித்து வந்தது.

தற்போது மனம்மாறியுள்ள ரஷ்யா, ஒப்பந்தப்படி இடம்பெற்ற தாமதத்திற்காக 2 கிரயோஜெனிக் என்ஜின்களை இலவசமாகவும் வழங்க முன்வந்துள்ளது. —கே-ி

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று செவ்வாய்க்கிழமை மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறும் குமாரசுவாமிப் புலவர் விழாவில் நினைவு உரையை திருமலை யோகேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

தானியங்கள் நாம் வளர்த்து
தரணியெல்லாம் பசிதீர்ப்போம்

